# தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

807, அண்ணா சாலை, சென்னை – 600 002.

புகைப்படம்

## கல்விக் கடன் விண்ணப்பம்

| | | | | |
|---|---|---|---|---|
| மாணவ / மாணவியர் பெயர் | | | தந்தை / பாதுகாவலர் பெயர் : | |
| பிறந்த தேதி | | வயது : | மாற்றுத்திறனாளியா : | ஆம் / இல்லை |
| ஆதார் எண் | | | வங்கி சேமிப்பு கணக்கு எண் : | |
| முகவரி : | | | | |
| | | | | |
| | | | பின்கோடு : | |
| மாவட்டம் | | | | |
| சார்ந்துள்ள மதம் | | | பிரிவு : பிவ / மிபிவ / சீம / ஆதி / ப.கு | |
| குடும்ப ஆண்டு வருமானம் | | | | |
| கல்வி நிலையத்தின் பெயர் | | | | |

தேவைப்படும் கல்விக் கடன்

| வருடம் | கல்வி கடன் ரூ. |
|---|---|
| முதலாம் ஆண்டு | |
| இரண்டாம் ஆண்டு | |
| மூன்றாம் ஆண்டு | |
| நான்காம் ஆண்டு | |
| ஐந்தாம் ஆண்டு | |

மேற்குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதியளிக்கிறேன்.

இணைப்பு

1. சாதிச் சான்று நகல் / பள்ளி மாற்று சான்றிதழ்
2. வருமான சான்றிதழ் நகல்.
3. இருப்பிட சான்றிதழ் நகல்.
4. இதர இனங்கள்

மனுதாரரின் கையொப்பம்

---

**ஒப்புதல் சீட்டு**

மனுதாரர் திரு. / திருமதி.............................................................................எண்பவரின்....................................

நாளிட்ட கல்விக் கடன் மனு.............................................................................அன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் /
கூட்டுறவுச் சங்கங்கள் மண்டல இணைப்பதிவாளர் அலுவலகம் /
தொடர்புடைய கூட்டுறவு வங்கி அலுவலகம்

# சிறுபான்மை வகுப்பை சார்ந்தவர்களுக்கு வழங்கப்படும் கல்விக்கடன் திட்டம்.

சிறுபான்மை வகுப்பை சேர்ந்த கிறித்தவ, இஸ்லாமிய, சீக்கிய, புத்த, பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்த மாணவ/மாணவியருக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் இளங்கலை/முதுகலை தொழிற்கல்வி/தொழில்நுட்பக்கல்வி மற்றும் குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி சார்ந்த படிப்பு பயில்பவர்களுக்கு (Short Term High Skill Development) குறைந்த வட்டி விகிதத்தில் கல்விக் கடன் வழங்கும் திட்டம் (Education Loan Scheme) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், டாம்கோ **(TAMCO)** மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சேர்க்கைக் கட்டணம்/பயிற்றுவிப்புக் கட்டணம், புத்தகம், எழுதுபொருள் மற்றும் படிப்புக்கு தேவையான உபகரணங்கள், தேர்வுக் கட்டணம், விடுதி மற்றும் உணவுக் கட்டணம் (விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மட்டும்) ஆகியவற்றை மேற்கொள்ள கல்விக்கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஆண்டு வருமான வரம்பின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இரண்டு திட்டங்களாக செயல்படுத்தப்படுகின்றன.

| வ. எண் | விவரங்கள் | திட்டம் – I | திட்டம் – II |
|---|---|---|---|
| 1 | ஆண்டு வருமான வரம்பு | நகர்புறம் ரூ.1,03,000/– க்குள் கிராமப்புறம் ரூ.81,000/– க்குள் | கிராமப்புறம் / நகர்புறம் ரூ.1,03,001/– முதல் ரூ.6,00,000/– வரை |
| 2 | தொழிற்கல்வி/தொழில் நுட்பக் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு படிப்புகள் | வருடத்திற்கு ரூ.3 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.15 இலட்சம் வரை ( அதிகபட்சம் 5 வருடங்கள்) | வருடத்திற்கு ரூ.4 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.20 இலட்சம் வரை. |
| 3 | முதுகலை தொழிற்கல்வி / தொழில் நுட்பக்கல்வி படிப்புகள் | வருடத்திற்கு ரூ.3 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.9 இலட்சம் வரை ( அதிகபட்சம் 3 வருடங்கள்) | வருடத்திற்கு ரூ.3 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.9 இலட்சம் வரை. |
| 4 | வெளிநாடுகளில் தொழிற்கல்வி / தொழில் நுட்பக்கல்வி படிப்புகள் | வருடத்திற்கு ரூ.4 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.20 இலட்சம் வரை ( அதிகபட்சம் 5 வருடங்கள்) | வருடத்திற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.30 இலட்சம் வரை. |
| 5 | வட்டி விகிதம் ( ஆண்டின்)<br>அ. மாணவர்,<br>ஆ. மாணவியர். | 3%<br>3% | 8%<br>5% |

| | | | |
|---|---|---|---|
| 6 | கடன் திரும்ப செலுத்த வேண்டிய கால வரம்பு | கல்வி பருவக்காலம் முடிந்த தேதியிலிருந்து (அல்லது) அடுத்த 6–வது மாதத்திலிருந்து அல்லது பணியில் அமர்ந்த தேதியிலிருந்து இதில் எது முந்தையதோ அந்த தேதியிலிருந்து வசூலிக்கப்படும். | கல்வி பருவக்காலம் முடிந்த தேதியிலிருந்து (அல்லது) அடுத்த 6–வது மாதத்திலிருந்து அல்லது பணியில் அமர்ந்த தேதியிலிருந்து இதில் எது முந்தையதோ அந்த தேதியிலிருந்து வசூலிக்கப்படும். |
| 7 | திரும்ப செலுத்த வேண்டிய தவணைகள் | 60 மாதங்கள் | 60 மாதங்கள் |
| 8 | அபராத வட்டி | 5% | 5% |
| 9 | செயல்படுத்தப்படும் வங்கிகள் | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி/நகர கூட்டுறவு வங்கி/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் செயல்படுத்தப்படுகிறது. | |

**விண்ணப்பத்திற்கான ஆவணங்கள்.**

1. ஆதார் அட்டை நகல்.
2. சாதிச் சான்றிதழ் / பள்ளி மாற்று சான்றிதழ் நகல்.
3. வருமான சான்றிதழ் நகல்
4. இருப்பிட சான்றிதழ் நகல்
5. உண்மைச் சான்றிதழ் (Bonafide Certificate) அசல் நகல்.
6. கல்விக் கட்டணங்கள் செலுத்திய இரசீது/ சலான் (Original).
7. மதிப்பெண் சான்றிதழ் நகல்.
8. அரசு/பொதுத்துறை நிறுவனங்கள்/வங்கிகள்/தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஒரு தனி நபர் உத்தரவாதம் (ஜாமீன்) அல்லது வங்கி கோரும் இதர ஆவணங்கள்.

மேற்படி அனைத்து ஆவணங்களின் நகல்கள் கல்வி நிலையங்களின் முதல்வரின் கையொப்பம் (Attestation) அவசியம் பெற்று வங்கியில் தவறாது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**கல்விக் கடன் புதுப்பித்தல்.**

ஒவ்வொரு ஆண்டும் மாணவ/மாணவியர் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் சான்றிதழ் வங்கியில் தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.

கூடுதல் விபரங்களுக்கு மாவட்ட ஆட்சியரக அறை எண்–110.ல் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். மேலும் **www.bcmbcmw.tn.gov.in** என்ற இணைய தளத்தின்மூலமாகவும், **0427–2451333 / 2451334** என்ற தொலைபேசி மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம்.

எனவே, சிறுபான்மை வகுப்பை சார்ந்த மாணவ / மாணவியர்கள் டாம்கோ **(TAMCO)** கல்விக்கடன் திட்டத்தின் மூலம் பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
சேலம்.